

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினான்காவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 24.MAR.2020)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினான்காவது அறிக்கை

"வேளாண்மை" குறித்து 2012–2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினான்காவது பேரவை) பேரவைக்கு அளித்த ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான அறிக்கை.

பொருளடக்கம்

		பக்கங்கள்
2018–2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	iii
I. முன்னுரை	...	v
II. அறிக்கை	...	vii

III. இணைப்புகள்

இணைப்பு – 1	நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்றவை	1–9
இணைப்பு – 2	துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப் பெற்றவை	10–24
இணைப்பு – 3	குழு மேலும் தொடர விரும்புபவை	25–36

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2020)
(பதினைந்தாவது பேரவை)

(5.7.2018–ஆம் நாள் அமைக்கப்பெற்று 31.03.2020 வரை நீட்டிக்கப்பட்டது)

தலைவர்

1. திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)
3. திரு. துரைமுருகன்
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. S. செம்மலை
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. C.V. இராஜேந்திரன்
6. திரு. இ. கருணாநிதி
7. திரு. ஆர். காந்தி
8. திரு. V.S. காளிமுத்து
9. திருமதி ப. சத்யா
10. திரு. சி. சந்திரசேகரன்
11. திரு. எஸ்.எஸ். சரவணன்
12. திரு. M. செல்வராசு
13. திரு. அ. நடராஜன்
14. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
15. முனைவர் க. பொன்முடி
16. திரு. கி. மாணிக்கம்
17. திரு. M.K. மோகன்
18. திரு. வி.ஜி. ராஜேந்திரன்
19. திரு. வாகை சந்திரசேகர்

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள் . . இணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

I. முன்னுரை

"வேளாண்மை" குறித்து 2012–2013–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினான்காவது பேரவை) 15.5.2013–ஆம் நாளன்று பேரவைக்கு அளித்த ஒன்பதாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான பதினான்காவது அறிக்கையை குழு 2018–2020 (பதினைந்தாவது பேரவை) அதிகாரம் அளித்தவாறு மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

குழு 19.3.2020–ஆம் நாளன்று சென்னையில் கூடி மேலே பத்தி 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைப் பட்டியலை ஆய்வு செய்து இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

குழுவின் பணிகளுக்கு பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020,
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு **என்.டி. வெங்கடாச்சலம்,**
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

II. அறிக்கை

"வேளாண்மை" குறித்து 2012–2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினான்காவது பேரவை) பேரவைக்கு அளித்த ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

******

1. 2012–2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினான்காவது பேரவை) பேரவைக்கு அளித்த ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள 43 பரிந்துரைகளில் 14 பரிந்துரைகள் அரசால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பெறுகின்றன. அவை இணைப்பு 1–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

15 பரிந்துரைகள் குறித்து அரசு அளித்துள்ள பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றன. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 2–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

14 பரிந்துரைகள் மீது அரசு மேலும் நடவடிக்கை தொடர வேண்டுமென குழு முடிவு செய்துள்ளது. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 3–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

2. இணைப்பு 3–இல் கண்டுள்ள குழு தொடர விரும்பும் பரிந்துரைகள் மீது துறை உரிய நடவடிக்கை எடுத்து 2 மாத காலத்திற்குள் விவர அறிக்கை அனுப்பப்படவேண்டுமென்று குழு விரும்புகிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020,
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

III. இணைப்புகள்

இணைப்பு – 1

நிறைவேற்றப் பெற்றதாக கருதப்பெற்ற பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	2	11	வேலூர், விருதுநகர், திருச்சி, ஈரோடு, திருவாரூர், கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு ரூ.0.77 கோடி செலவில் 430 கருவிகள் விரைவில் கொள்முதல் செய்து வழங்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	பண்ணை விவரங்களை எளிதாக சேகரிக்கவும், சிறந்த முறையில் பணிகளை கண்காணிக்கவும், களப்பணியாளர்களுக்கு ஜி.பி.ஆர்.எஸ். வசதியுடன் கூடிய 657 கையடக்க கருவிகள் ரூ.1.20 கோடி (மத்திய அரசு நிதி ரூ.0.77 கோடி + மாநில அரசு நிதி ரூ.0.43 கோடி) செலவில் வழங்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2	3	13	ரூ.0.81 கோடி செலவில் தொடுதிரை மையங்கள் திருச்சி, ஈரோடு, திருவாரூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 125 இடங்களில் உடனடியாக அமைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	திருச்சி (26 எண்கள்), ஈரோடு (36 எண்கள்), கோயம்புத்தூர் (21 எண்கள்) மற்றும் திருவாரூர் (42 எண்கள்) மாவட்டங்களில் மொத்தம் 125 வேளாண் தகவல் அளிக்கும் தொடுதிரை மையங்கள் அமைக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
(1)	(2)	(3)	(4)		
3	5	28	தென்னந்தோப்புகளுக்கு புத்தூட்டம் – (ஐந்து வருட மரங்கள்) இத்திட்டத்தினை 2013–2014–இல் செயல்படுத்தி விரைவில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கிட குழு பரிந்துரை செய்கிறது.		
			துறையின் பதில் (5)		குழுவின் குறிப்புரை (6)
			1. அரசாணை (நிலை) எண்.52, வேளாண்மை (தோ.க.2)த் துறை, நாள். 20.03.2013–இன் படி, 2013–2014–ஆம் ஆண்டிற்கு ரூ.221.1384 இலட்சம் மற்றும் 2014–2015–ஆம் ஆண்டிற்கு ரூ.263.26 இலட்சம் தொகையும் செலவிட நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. மேற்கண்ட திட்டம் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள தானே புயலினால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு அளிக்கப்படவேண்டிய திட்டமாகும்.		நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

2. இத்திட்டத்தின் கீழ் அரசாணையில் அனுமதி அளிக்கப்பட்ட இடுபொருட்களின் விவரம் மற்றும் ஒதுக்கீடு தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:–

Sl. No.	Year	Recommended Input / rate / tree	Fund requirement (Rs. in lakhs)		
			Cuddalore	Villupuram	Total
1	2013-2014	Urea = 0.650 kg = 4.00 Single superphospate -1.00 kg = 10.00 Potash = 1.000 kg = 19.00 Biofertiliser = 2 pkt = 12.00 MN Mixture = 1 kg = 60.00 Total = 105.00	170.1903	50.9481	221.1384
2	2014-2015	Urea = 0.975 kg = 7.00 Single superphospate -1.500 kg = 16.00 Potash = 1.500 kg = 30.00 Biofertiliser = 2 pkt = 12.00 MN Mixture = 1 kg = 60.00 Total = 125.00	202.6075	60.6525	263.2600

3. மேற்கண்ட இரு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மரங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, பாதிக்கப்பட்ட மரங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் போன்ற விவரங்கள் பின்வருமாறு:–

மாவட்டம்	2013–14				2014–15			
	பாதிக்கப்பட்ட மரங்கள்	ஒதுக்கீடு நிதி (ரூ. இலட்சத்தில்)	செலவு ரூ. இலட்சத்தில்)	மீதம் (ரூ. இலட்சத்தில்)	1 பாதிக்கப் பட்ட மரங்கள்	2 ஒதுக்கீடு நிதி (ரூ. இலட்சத் தில்)	3 செலவு ரூ. இலட்சத் தில்	4 மீதம் (ரூ. இலட்சத் தில்)
கடலூர்	162086	170.1903	170.162	0.0283	162086	202.607 5	195.252	7,3555
விழுப்புரம்	48522	50.9481	44.230	6,7181	48522	60.6525	59.276	1,3765

4. 2013–2014 மற்றும் 2014–2015–ஆம் ஆண்டுகளில் மேற்கண்ட திட்டம் செயல்படுத்தப்பட்டு அவ்வாண்டிலேயே முடிக்கப்பட்டன. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை வ.எண்.2–இல் தெரிவிக்கப்பட்டபடி, இடுபொருள் கொள்முதல் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டன. இடுபொருள் கொள்முதல் மேற்கொள்ளும்போது நுண்ணூட்டக் கலவை இடுபொருளின் விலை எதிர்பார்த்ததைவிடக் குறைவாக இருந்ததால் மேற்காணும் சேமிப்பு ஏற்பட்டது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	குழுவின் குறிப்புரை (6)
4	10	40	இயற்கை உரங்கள் தயாரித்து வழங்கும் திட்டத்தில் உள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு அவைகளை நீக்கி மாநிலத்தில் இயற்கை உரம் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

துறையின் பதில்
(5)

அங்கக பண்ணையம், மண்ணின் அங்கக சக்தியினை பாதுகாத்து மண்ணின் வளத்தினை மேம்படுத்துகிறது. மேலும், பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் சீராக இருக்க உதவுகிறது. அங்ககப் பண்ணையத்தில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத்தில், தொழுஉரமிடுதல், கூட்டு உரங்கள், மண்புழு உரம், பசுந்தாள் உரமிடுதல் மற்றும் உயிர் உரங்கள் இடுதல் முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழ்நாடு அரசு, மாநில நிதியில் ஆண்டுதோறும் 250 மெட்ரிக் டன் பசுந்தாள் உர விதைகள், 525 மெட்ரிக் டன் நீலப்பச்சைப்பாசி, 500 மெட்ரிக் டன் அசோலா, 5,000 எண்கள் புளுரோட்டஸ் காளான் சிறுதளைகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகித்து வருகிறது.

அகில இந்திய அளவில் உயிர் உர பயன்பாட்டில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தினை வகிக்கிறது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயங்கிவரும், 22 உயிர் உர உற்பத்தி மையங்களின் மூலம் திட உயிர் உரங்கள் 3000 மெட்ரிக் டன் மற்றும் திரவ உயிர் உரம் 6 இலட்சம் லிட்டர் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. உயிர் உரங்கள், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் ஆகிய மத்திய, மாநில பங்கீட்டு திட்டங்கள் மூலம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், தனியாருக்கு சொந்தமாக மொத்தம் 13 உயிர் உர உற்பத்தி மையங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இந்த உற்பத்தி மையங்களின் மூலம் 8,000 மெ.டன் திட உயிர் உரமும், 1.5 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரமும் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

மண்வள மேம்பாட்டில் முக்கிய பங்காற்றும் பசுந்தாள்உர பயன்பாட்டினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்திட தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், 2018–2019 ஆம் ஆண்டு, 18,751 எக்டேர் பரப்பிற்கு பசுந்தாள் உர விதைகள் 50 சதவீத மானியத்தில் ரூ.2.81 கோடி நிதி செலவில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மேலும், அங்கக பண்ணையத்தை ஊக்குவிக்க பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் (PKVY) நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் (NMSA) கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாண்டு தொடர் திட்டமாக செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் நோக்கம், குழு அணுகுமுறையின் மூலம் பங்கேற்பு உத்திரவாத சான்றளிப்பு (PGS-Participatory Guarantee system) முறையை அமல்படுத்துவதே ஆகும். விவசாயிகளை குழுக்களாக ஒருங்கிணைத்து, திறன் கூட்டு பயிற்சி, அங்கக இடுபொருட்கள் கொள்முதல், அங்கக இடுபொருட்கள் உற்பத்தி மையம் அமைத்தல், முதலியவற்றிற்காக நிதியுதவி குழுக்களுக்கு அளிக்கப்படுகிறது.

நகர கழிவினை உரமாக்குதல் திட்டத்தின் கீழ் 104 நகர கழிவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதிலிருந்து ஒரு இலட்சம் மெ.டன் நகர கழிவு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகர கழிவு உற்பத்தியினை ஊக்கப்படுத்த விற்பனையாளருக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,500/– விற்பனை உற்பத்தி மானியமாக வழங்கப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–1 / 2013–83, நாள் 10.10.2019)

பரிந்துரையின் சுருக்கம்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	(4)
5	12	44	8 புதிய நடமாடும் மண் ஆய்வு ஊர்திகள் நடப்பு நிதியாண்டில் கொள்முதல் செய்து வழங்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			2012–2013 ஆம் ஆண்டில், 13 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களை வலுப்படுத்த நவீன ஆய்வுக் கருவிகள் பொருத்தப்பட்ட புதிய வாகனங்கள் வாங்க திட்டமிடப்பட்டு, 5 வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 8 வாகனங்கள் 2013 ஜூன் மாதத்தில் கொள்முதல் செய்யப்பட்டன.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
			(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	14	48	2011–2012 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திண்டுக்கல், திருச்சி ஆகிய மாவட்டங்களில் நிறைவு பெற்றது நீங்கலாக ஏனைய இடங்களில் பணிகள் நடைபெற்று வருவதை விரைவுபடுத்தி உழவர் மையங்கள் அமைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	2011–2012 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திண்டுக்கல், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உழவர் மையம் அமைக்கும் பணி நிறைவு பெற்றது. மேலும் காஞ்சிபுரம், ஈரோடு, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலும் உழவர் மையங்கள் அமைக்கும் பணிகள் நிறைவு பெற்று பயன்பாட்டில் உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
	(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	19	62	கொடைக்கானலில் ரோஜா தோட்டம், கொம்மலர்கள் செயல்முறை மாதிரிப் பண்ணை ரூ.380 இலட்சம் செலவிலும், கன்னியாகுமரியில் ஓர் சுற்றுச்சூழல் பூங்கா ரூ.400 இலட்சம் செலவிலும் அமைக்கும் பணியை துரிதப்படுத்தி விரைவாக முடித்து குழுவிற்கு ஓர் அறிக்கை அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	கொடைக்கானலில் ரோஜா பூங்கா மற்றும் கொம்மலர்கள் செயல்முறை மாதிரி பண்ணை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.05.2018 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணையில் ரூ.4 கோடி செலவினத்தில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணிகள் முடிவுற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05.04.2018 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம் (4)
(1)	(2)	(3)	
8	20	64	இராமநாதபுரம் மாவட்டம், அச்சடிபிரம்பில் ரூ.784 இலட்சம் மதிப்பீட்டில் ஐந்திணை மரபணு பூங்கா அமைக்கும் பணியை துரிதப்படுத்தி பூங்காவை அமைத்து இது குறித்து அறிக்கை ஒன்றை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)

குழுவின் குறிப்புரை (6)

இராமநாதபுரம் மாவட்டம், அச்சடிபிரம்புவில் ரூ. 784 இலட்சம் மதிப்பீட்டில் ஐந்திணை மரபணு பூங்காவில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு 15.06.2015 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம் (4)
(1)	(2)	(3)	
9	21	66	தமிழ்நாடு அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உள்ள வளங்களை பயன்படுத்துவதற்கு முதல் கட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம் விச்சந்தாங்கல், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர், சேலம் மாவட்டம் முள்ளுவாடி, புதுக்கோட்டை மாவட்டம் வல்லத்திராக் கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை ஆகிய இடங்களில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை நவீனப்படுத்தி உற்பத்தி திறனை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை விரைவு படுத்தி நடப்பாண்டில் பணிகள் முடிவுற்றது குறித்த அறிக்கை ஒன்றை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)

குழுவின் குறிப்புரை (6)

தமிழ்நாடு அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உள்ள வளங்களை முழுமையாக பயன்படுத்தி அதன் மூலம் நடவுபொருட்கள் உற்பத்தி அதிகரிக்கும் நோக்கத்தோடு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள விச்சந்தாங்கல், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர், சேலம் மாவட்டம் முள்ளுவாடி, புதுக்கோட்டை மாவட்டம் வல்லத்திராக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை ஆகிய இடங்களில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகளை நவீனப்படுத்தும் பணி முடிவுற்று, நடவு பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு உற்பத்தி பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
10	23	71	கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் ரூ.150 இலட்சம் செலவில் தோட்டக்கலை பயிற்சி மையத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிக்கு தொழில் நுட்ப ஒப்புதல் பெற்று 2013 – 2014இல் பணியை விரைவாக முடிப்பதற்கு துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் ரூ.150 இலட்சம் செலவில் விவசாயிகள் மற்றும் பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
11	35	100	கரூர் மாவட்டத்தில் ரூ.27.90 இலட்சம் மதிப்பீட்டில் 14 பண்ணைக் குட்டைகள் மற்றும் 2 தடுப்பணைகள் அமைக்கும் பணிக்கு அரசின் ஒப்புதலைப் பெற்று அப்பணிகளை விரைவாக முடிப்பதற்கு துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2012–2013 ஆம் ஆண்டில் மழை நீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மை திட்டத்தின்கீழ் அரசாணை (2டி) எண் 27, வேளாண்மைத் (வேபொ2) துறை, நாள் 11.03.2013–ன்படி, கரூர் மாவட்டத்தில் ரூ.27.90 இலட்சம் மதிப்பீட்டில் 14 பண்ணைக் குட்டைகள் மற்றும் 2 தடுப்பணைகள் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டது. அரசு கடித எண் 10136/ வேபொ2/2013–3, நாள் 07.06.2013–ன்படி மீண்டும் செல்லுபடியாக்கும் ஆணை பெறப்பட்டு, கரூர் மாவட்டத்தில் ரூ.27.90 இலட்சம் மதிப்பீட்டில் 14 பண்ணைக் குட்டைகள் மற்றும் 3 தடுப்பணைகள் அமைக்கப்பட்டது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
12	39	119	வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் கீழ் 2000 மெட்ரிக் டன் கொள்ளவு உள்ள 2 நவீன கிட்டங்கிகளை அமைக்கும் பணியை துரித நடவடிக்கை மேற்கொண்டு விரைவாக முடிப்பதற்கு குழு பரிந்துரை செய்கிறது.	அரசாணை(நிலை)எண்.251, வேளாண்மை (நீ.மே.1) துறை, நாள் 06.11.2012–இல் பிறவற்றுடன் செங்கம், விருத்தாச்சலம் கருமாண்டி செல்லிப்பாளையம், வெப்பிலி, திருப்பத்தூர், வாணியம்பாடி, தொண்டமுத்தூர், பல்லடம், பொங்கலூர், செம்பனார்கோயில், அரூர், ஆர்.எஸ்.மங்கலம், கும்பகோணம், போச்சம்பள்ளி, ஆத்தூர், துவரங்குறிச்சி, கள்ளக்குறிச்சி, பென்னாகரம், அம்பாசமுத்திரம் மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய 20 இடங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 2000 மெட்டன் கொள்ளவு கொண்ட கிட்டங்கிகளை ரூ.1.20 கோடி வீதம் மொத்தம் ரூ.24.00 கோடி செலவில் அமைத்திட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மதிப்பீட்டுக்குழு பரிந்துரையில் குறிப்பிடப்படும் செம்பனார்கோயில் மற்றும் போடிநாயக்கனூர் கிட்டங்கிகள் உட்பட 20 கிட்டங்கிகள் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.06.2014 மற்றும் 16.06.2015 ஆகிய தேதிகளில் அவை திறக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
13	40	121	தருமபுரி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் அமைக்கப்பட்டு வரும் புளி குளிர்பதனக் கிடங்கில், தற்போது டிரஸ் பணி நடைபெறுவதாக குழு அறிகிறது. இப்பணியை மேலும் காலதாமதம் இல்லாமல் துரித நடவடிக்கை மேற்கொண்டு பணியை நிறைவு செய்ய குழு பரிந்துரை செய்கிறது.		

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் 2011–2012–ஆம் ஆண்டின் கீழ் தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், புளிக்கென 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு பணிகள் முடிவடைந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16.06.2015 அன்று திறக்கப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
14	41	123	திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் மிளகாய்க்கென அமைக்கப்பட்டு வரும் குளிர்பதனக் கிட்டங்கிக்கான முதல்தள கட்டுமானப்பணியை மேலும் காலதாமதம் இல்லாமல் தூரித நடவடிக்கை மேற்கொண்டு பணியை நிறைவு செய்ய குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் 2011–2012 ஆம் ஆண்டின் கீழ் திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மிளகாய்க்கென 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு பணிகள் அனைத்தும் முடிவடைந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16.06.2015 அன்று திறக்கப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

இணைப்பு – 2

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றவை

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	4	24	தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் திருந்திய நெல் சாகுபடி மூலம் குறைந்த தண்ணீரில் அதிக செலவின்றி, குறைந்த வேலையாட்களைக் கொண்டு பயிர் செய்து அதிக மகசூல் பெற வாய்ப்பு உள்ளது. இது குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்தி நெல் உற்பத்தியில் நூறு சதவிகிதம் இலக்கை அடைய உரிய நடவடிக்கைகளை துறை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	பயிருக்கேற்ற புதிய உத்திகள்/தொழில் நுட்பங்கள் அனைத்தும் உழவர் பெருவிழா போன்ற விவசாயிகள் திரளாக பங்கு பெறும் விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் உழவர் பயிற்சி மையங்கள் மூலம் பரவலாக்கம் செய்யப்படுகிறது. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தொகுப்பு செயல் விளக்கங்கள் அமைக்கப்படுவதோடு, 2000 கிராமங்களில் முழு கிராம அணுகுமுறையிலும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் நெற்பயிருக்கான இயக்கத்தின் கீழ் ரூ.15.60 கோடி செலவில் 52000 எக்டேர் பரப்பளவிலும் திருந்திய நெல் சாகுபடி முறை பரவலாக்கம் செய்யப்படுகிறது. மேலும், இம்முறை மூலம் அதிக அரிசி உற்பத்தி பெறும் விவசாயிக்கு ரூ.5 இலட்சம் ரொக்கப் பரிசும், ரூ.3500/– மதிப்புள்ள விருதும் வழங்கப்படுகிறது. இந்நடவடிக்கைகளால் 2007–2008 ஆம் ஆண்டில் 4.209 இலட்சம் எக்டேரில் மேற்கொள்ளப்பட்ட இத்தொழில்நுட்பம் 2012–2013 ஆம் ஆண்டில் 6.853 இலட்சம் எக்டேரில் கடைப்பிடிக்கப்பட்டது. 2013–2014 ஆம் ஆண்டில், 12 இலட்சம் எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.
2	6	31	மேலே கூறிய ரொக்கப்பரிசுகள் வழங்குவதனால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த விவரம் குழுவிற்கு அறிக்கையாக அளிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.		

நவீன பண்ணை தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க விவசாயிகளை ஊக்குவிப்பதன் மூலம் பண்ணை உற்பத்தித் திறனை அதிகரிக்க ஏதுவாக நெல், மணிலா, சோளம், கம்பு, மக்காச்சோளம், பச்சைப்பயிறு மற்றும் உளுந்து ஆகிய பயிர்களில் மாநில மற்றும் மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இப்போட்டிகளில் பங்குபெற நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு மாநில அளவில் நுழைவுக் கட்டணம் ரூ.100/–ஆகவும், பிற பயிர்களுக்கு ரூ.50/–ஆகவும், மாவட்ட அளவிலான போட்டிகளில் நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ.50/–ஆகவும், பிற பயிர்களுக்கு ரூ.25/–ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு, போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் நெல், மக்காச்சோளம், இறவை மணிலா, சோளம், கம்பு, உளுந்து, பச்சைப்பயறு ஆகிய பயிர்களில் 62 மாவட்ட அளவிலான போட்டிகள் மற்றும் 6 மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனவே, பயிர் விளைச்சல் போட்டிகளில், ரொக்கப்பரிசு வழங்குவதன் மூலம் வேளாண்மையை சிறப்புற மேற்கொண்டு, உணவு தானியம் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் விவசாயிகள் அங்கீகரிக்கப்படுகின்றனர். இப்போட்டிகள் மூலம்,

- விவசாயிகள் நவீன பண்ணைத் தொழில்நுட்பங்கள் மற்றும் அதிக மதிப்புள்ள இடுபொருட்கள் உபயோகிப்பதை ஊக்கப்படுத்தி பிற விவசாயிகளுக்கு முன்னுதாரணமாக திகழவும்,
- பயிருக்குரிய தொழில்நுட்பங்களை எளிதாகவும், திறம்படவும் பரவலாக்கம் செய்யவும்,
- மாவட்டங்களுக்குள் மற்றும் மாவட்டங்களுக்கிடையே உற்பத்தித்திறனில் உள்ள இடைவெளியை குறைக்கவும்,
- சமையல் எண்ணெய்க்கான உற்பத்தி–தேவை இடைவெளியை ஓரளவு குறைப்பதோடு, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்ய இயலும்.
- 2007–2008 ஆம் ஆண்டில் 65.82 இலட்சம் மெ.டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி 2011–2012 ஆம் ஆண்டில் 101.52 இலட்சம் மெ.டன்னாக அதிகரித்துள்ளது. இதன் மூலம் மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தியை அதிகரிப்பதில் இப்போட்டிகளின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது. மேலும், பயிர் சார்ந்த உத்திகள் மற்றும் தொழில் நுட்பங்களை விவசாயிகள் மேற்கொண்டதால் நெல், சோளம், கம்பு, மக்காச்சோளம், பச்சைப்பயறு, உளுந்து மற்றும் நிலக்கடலை ஆகிய பயிர்களில் உற்பத்தித் திறனும் அதிகரித்துள்ளது.

பயிர்	உற்பத்தி திறன் (கிலோ/எக்டர்)				
	2007–2008	2008–2009	2009–2010	2010–2011	2011–2012 (இறுதி மதிப்பீடு)
நெல்	2817	2682	3070	3039	3918
சோளம்	874	824	931	1014	1277

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

கம்பு	1436	1483	1519	1564	2452
மக்காச்சோளம்	3626	4388	4661	4458	6042
பச்சைப்பயிறு	291	226	345	336	519
உளுந்து	260	315	380	407	580
நிலக்கடலை	1957	1990	2169	2323	2751

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I/2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	8	36	பயிர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளிடத்தில் விழிப்புணர்வில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து குழுவிற்கு அறிக்கை ஒன்று அளிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
பொருளாதார ரீதியில் இலாபம் ஈட்டக்கூடிய மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத உகந்த சாகுபடி முறைகளை அதிகளவில் கடைப்பிடிக்க பின்வரும் திட்டமிடப்பட்ட உத்திகள் கடைப்பிடிக்கப்படுகிறது: (அ) பூச்சிக்கொல்லி மருந்துகளை அதிகளவில் பயன் படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், (ஆ) கிராம அளவில் உயிரியல் பூச்சிக் கொல்லி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பங்கள்பரவலாக்குதல். (இ) வயல்வெளி சார்ந்த இத்தொழில்நுட்பம் கடைப்பிடிக்கும் இடங்களுக்கு விவசாயிகளை அழைத்துச் செல்வதன் மூலம் இயற்கைமுறை பூச்சி/நோய் மேலாண்மை குறித்த விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், (ஈ) ஒருங்கிணைந்த மேலாண்மை மற்றும் இயற்கை முறை பூச்சி / நோய் மேலாண்மைக்கான தொழில்நுட்ப செயல்பாட்டிற்கு மானியம் வழங்குதல். மேலும், நிரந்தர பூச்சி நோய் கண்காணிப்பு திடல்கள் மற்றும் சுற்றுக்கணிப்பு முறை மூலம் முறையே வாராந்திர, தினசரி இடைவெளியில் பூச்சி நோய் பாதிப்பினை கண்காணித்து முன்னறிவிப்பு செய்யவும், வானொலி, தொலைக்காட்சி, துண்டு பிரசுரங்கள், முகாம்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான பயிர் வாரியான, பூச்சிகள் பயிர் பாதுகாப்பு முறைகள் பரிந்துரை செய்யப்படுகின்றன. மேலும், விதைகள் மூலம் பரவும் நோய்கள் மற்றும் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான உரிய விதை நேர்த்தி முறைகள் குறித்து தீவிர விதை நேர்த்தி முகாம்கள் வாயிலாக விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. உழவர் வயல் வெளிப் பள்ளிகள் மூலம் விதைப்பு முதல் சேமிப்பு வரை பல்வேறு நிலைகளில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய்	துறையின் பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

மேலாண்மை முறைகள் பிரபலப்படுத்தப்படுகின்றன. இம்முறைகள் திறம்பட பின்பற்றியதால், 1984–1985 ஆம் ஆண்டில் 10,926 மெ.டன்னாக இருந்த பூச்சிக்கொல்லி மருந்து மூலக்கூறுகள் (Technical Grade) பயன்பாடு 2011–2012 ஆம் ஆண்டில் 2486 மெ.டன்னாகவும், 2012–2013 ஆம் ஆண்டில், 2180 மெ.டன்னாகவும், குறைந்துள்ளது. மேலும் 2011–2012 ஆம் ஆண்டில் 208 மெ.டன்னாக இருந்த உயிரியல் பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு 2012–2013 ஆம் ஆண்டில் 247 மெ.டன்னாக அதிகரித்துள்ளது. மேலும் 10 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 2 ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை மையங்கள் மூலம் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, அங்ககப் பண்ணைய முறையின் ஒரு பகுதியாக, சுற்றுப்புறச் சூழலை பாதிக்காத பூச்சி மேலாண்மைக்காக இவ்வுயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

பொதுவாக விவசாயிகள் நெற்பயிருக்கு 4 முதல் 5 சுற்று வரை பூச்சி மருந்து பயன்படுத்தி வந்தனர். இந்த நிலை தற்போது வெகுவாக குறைந்து, விதை நேர்த்தி, நாற்று தோய்வு, உயிரி பூச்சி கொல்லி மற்றும் உயிரியல் கட்டுப்பாடு காரணிகள் பயன்பாடு, பிரமோன் மற்றும் விளக்குபொறி அமைத்தல் போன்ற இயற்கை முறையில் பூச்சி/நோய் கட்டுப்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர்.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
4	13	46	விளம்பரங்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் உரக்கலப்படத்தை சுலபமாக கண்டறியும் எளிய முறைகளை விவசாயிகளுக்கு தெரிவிக்க உரிய நடவடிக்கையை துறை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	பிற இடுபொருட்கள் போன்று, உரக்கலப்படத்தை எளிய முறையில் அறிந்திட வழிகாட்டுதல் முறைகள் இல்லை. கலப்பட உரம் மற்றும் தரக்குறைவான உரங்களை விவசாயிகள் பயன்படுத்துவதை தவிர்க்கும் பொருட்டு ஆண்டுதோறும் 17,000 உரமாதிரிகள் எடுக்கப்பட்டு, உரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்கு அனுப்பி ஆய்வின் அடிப்படையில் உரம் தரமுடையதா அல்லது தரமற்றதா என அறியப்படுகிறது. உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985–இல் பகுதி A, அட்டவணை I, III, IV மற்றும் V–இல் அறிவிக்கப்பட்ட உரவகைகள் மட்டுமே விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985ல் அட்டவணை II, பகுதி A மற்றும் பகுதி B–யினை பின்பற்றி உரமாதிரிகள் எடுக்கப்பட்டு பகுதி N–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல் மற்றும் பரிசோதனை முறைகளை பின்பற்றியே உர தர முடிவுகள் தெரிவிக்கப்படுகிறது. அங்ஙனம் அறியப்பட்ட தரத்தன்மையினை சட்டபூர்வமாக அறிவிக்க இயலும். எனவே எளிய வகை முறைகள் உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985ல் குறிப்பிடப்படவில்லை .

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
5	16	52	வேளாண் காப்பீட்டுத் திட்டங்கள் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, அனைத்து விவசாயிகளுக்கும் ஒரே மாதிரியான காலக்கெடு வழங்குவது குறித்து மத்திய அரசினை வலியுறுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	அனைத்து மாவட்டங்களிலும் "தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம்" (National Agricultural Insurance Scheme) செயல்படுத்தப்பட்டதால் கடன் பெறும் மற்றும் கடன் பெறா விவசாயிகளுக்கு ஒரே மாதிரியான காலக்கெடு நிர்ணயித்திட அனுமதி கோரி மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது. எனினும், இதற்கான மத்திய அரசின் ஆணை வழங்கப்படவில்லை. இந்நிலையில், தற்போது காரீப் 2016 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் (Pradhan Mantri Fasal Bima Yojana) கீழ் கடன் பெறும் மற்றும் கடன் பெறா விவசாயிகளுக்கு ஒரே மாதிரியான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	17	56	தோட்டக்கலை பயிற்சிகள் மாவட்ட வாரியாக வழங்கப்பட்ட விவரங்களையும், பயிற்சி முன்னேற்றம் குறித்தும் குழுவிற்கு அறிக்கை ஒன்று அளிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

தோட்டக்கலை பயிற்சி மையம், மாதவரம், மத்திய தோட்டக்கலை பயிற்சி மையம், குடுமியான்மலை, உழவர் பயிற்சி நிலையம், உதகை மற்றும் தோட்டக்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தளி ஆகிய தோட்டக்கலை பயிற்சி நிலையங்கள் மூலமாக 6400 விவசாயிகளுக்கு ரூ.19.20 இலட்சம் செலவில் தோட்டக்கலை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலை உயர் தொழில்நுட்பங்களான துல்லியப் பண்ணையம், பசுமைக்குடிலில் மலர் மற்றும் காய்கறி சாகுபடி, அடர்நடவு முறை மற்றும் கிளை மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி / நோய் மேலாண்மை, நுண்ணீர் பாசனம் மற்றும் உரப்பாசனம் ஆகியவற்றில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக பயிற்சி பெற்ற விவசாயிகளின் விவரம் பின்வருமாறு.

வ.எண்	தோட்டக்கலை பயிற்சி மையம்	மாவட்டம்	பயிற்சி பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை	செலவினத் தொகை (ரூ.இலட்சத்தில்)
1	தோட்டக்கலை பயிற்சி மையம் மாதவரம்	திருவள்ளூர்	250	0.750
		வேலூர்	250	0.750
		கடலூர்	250	0.750
		பெரம்பலூர்	250	0.750
		காஞ்சிபுரம்	200	0.600
		திருவண்ணாமலை	150	0.450
		விழுப்புரம்	150	0.450
		தஞ்சாவூர்	150	0.450
		திருவாரூர்	100	0.300
		நாகப்பட்டினம்	100	0.300
		Sub – Total	1850	5.550
2	மத்திய தோட்டக்கலை பயிற்சி மையம் குடுமியான்மலை	திருநெல்வேலி	250	0.750
		இராமநாதபுரம்	250	0.750
		திண்டுக்கல்	250	0.750
		மதுரை	250	0.750
		தேனி	250	0.750
		திருச்சி	250	0.750

		சிவகங்கை	200	0.600
		புதுக்கோட்டை	200	0.600
		விருதுநகர்	150	0.450
		தூத்துக்குடி	150	0.450
		கன்னியாகுமரி	150	0.450
		அரியலூர்	100	0.300
		Sub – Total	**2450**	**7.350**
3	உழவர் பயிற்சி மையம், உதகை	கோயம்புத்தூர்	250	0.750
		உதகை	250	0.750
		திருப்பூர்	100	0.300
		Sub – Total	**600**	**1.800**
4	தோட்டக்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தளி	ஈரோடு	250	0.750
		சேலம்	250	0.750
		தர்மபுரி	250	0.750
		கிருஷ்ணகிரி	250	0.750
		நாமக்கல்	250	0.750
		கரூர்	250	0.750
		Sub – Total	**1500**	**4500**
		Grand Total	**6400**	**19.200**

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	18	59	உயர்மட்டக் குழு அரசாணை எண். 221, வேளாண்மை (எச்.1) துறை, நாள்: 25.11.2011–இல் திருத்தங்கள் கொண்டுவர அனுப்பப்பட்ட கருத்துருவிற்கு அரசு ஒப்புதல் அளித்ததா என்ற விவரத்தினை தெரிவித்து குழுவிற்கு அறிக்கை ஒன்று அனுப்பிவைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

குழுவின் குறிப்புரை
(6)

அரசாணை (நிலை) எண்.221, வேளாண்மை (எச்.1) துறை, நாள் 25.11.2011–இல் இத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, அரசாணை (நிலை) எண்.75, வேளாண்மை (எச்.1) துறை, நாள் 17.04.2013 அன்று வெளியிடப்பட்டது. அரசாணைகளின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அரசாணையில் செய்த மாற்றங்கள் பின்வருமாறு:

துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வ.எண்	அரசாணை எண் 221, வேளாண்மை (எச்.1) துறை, 25.11.2011–இல் குறிப்பிட்டிருந்தவை	அரசாணை எண் 75,வேளாண்மை (எச்.1) துறை, நாள் 17.04.2013–ல் மாற்றம் செய்யப்பட்டவை
1.	இடைவெளி / பயிர் ஏதுவாக இருப்பினும், ஒரு நபருக்கு அதிகபட்சமாக ரூ.43,816 மானியம் மட்டுமே வழங்கப்படும் என குறிப்பிட்டிருந்தது.	ஒரு நபருக்கு அதிகபட்சமாக 5 எக்டேர் வரையிலும், சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கப்படும் என குறிப்பிட்டிருந்தது.
2.	நுண்ணீர் பாசன நிறுவனங்களுக்கு மானியத் தொகை விடுவிக்கும் பொழுது, 10 சதவிகித தொகையை பிடித்தம் செய்ய வேண்டும் என குறிப்பிட்டிருந்தது.	நுண்ணீர் பாசன நிறுவனங்களுக்கு மானியத் தொகை விடுவிக்கும் பொழுது 2 சதவிகித மானியத் தொகையை பிடித்தம் செய்ய வேண்டும் என்றும், 3 சதவிகித மானிய தொகையை வங்கி உத்திரவாதமாக நுண்ணீர் பாசன நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.

எனினும் தற்பொழுது அரசாணை எண் 269 வேளாண்மை (எச்.1) துறை, நாள்:26.10.2018–ன் படி, நுண்ணீர் பாசன நிறுவனங்களிடமிருந்து 5 சதவிகித மானியத் தொகை வங்கி உத்திரவாதமாக மட்டுமே பெறப்படுகிறது. மேலும், உயர் மட்டக் குழுவின் பரிந்துரையின்படி கீழ்கண்ட நடைமுறைகள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது.

விலைதிருத்தம்:–

உயர் மட்டக்குழு அறிவுரையின்படி, நுண்ணீர் பாசனக் கருவிகளின் விலையை நிர்ணயம் செய்வது மேலாண்மை இயக்குநர், தோட்டக்கலை வளர்ச்சி முகமை, அவர்களின் மேற்பார்வையின் கீழ்வருவதால், அதை அவரே முடிவு செய்யலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூன்றாம் நபர் ஆய்வு:–

2012–2013–ஆம் ஆண்டில் அறிவிக்கை செய்யப்பட்டபடி தமிழக அரசு, மூன்றாம் நபர் ஆய்வு முகமையை நியமிக்க அனுமதி வழங்கியுள்ளது. அதற்கான செலவை தேசிய நுண்ணீர் பாசன இயக்கத் திட்டத்தின் நிர்வாக செலவினத்தில் மேற்கொள்ளலாம் என்றும் மூன்றாம் நபர் ஆய்வு மற்றும் 100சதவிகித வயல் ஆய்வு செய்த புவிகுறியீடுடன் கூடிய புகைப்படங்கள் மற்றும் பயனாளியின் புகைப்படம் ஆகியவை இணையத்தில் பதிவேற்றம் செய்யவேண்டும் என்றும் பரிந்துரைசெய்துள்ளது.

அலைபேசி மூலம் கண்காணிப்பு செய்தல்:–

அலைபேசியில் இயங்கக் கூடிய மென்பொருள் மூலம் புவிகுறியீடுடன் கூடிய நுண்ணீர் பாசனம் அமைக்கப்பட்ட வயல்களின் புகைப்படங்கள், புகைப்படம் எடுக்கப்பட்ட நேரம், நாள் மற்றும் தனிப்பட்ட அடையாள எண் ஆகியவற்றை பதிவு செய்ய வேண்டும் எனவும், அதற்கான செலவு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் " தோட்டக்கலைத் துறையை கணினி மயமாக்குதல்" என்ற இனத்தில் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இணையத்தில் மேற்பார்வை செய்தல்:–

நுண்ணீர் பாசனத் திட்டம் இணையத்தின் மூலம் செயல்பட்டுவருகிறது. விண்ணப்பங்கள் பதிவு முதல் மானிய விடுவிப்பு வரை இணையத்திலேயே நடைபெறுவதால் நுண்ணீர் பாசனதிட்டம் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்தும் அனைத்து துறையினருக்கும் பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல் வழங்கப்பட்டுள்ளது. அரசு, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரிடம் உபயோகிக்க எளிதாக இருக்கும் வகையில் தற்பொழுது நடைமுறையில் உள்ள இணைய சேவையை திருத்தம் செய்ய கேட்டுக்கொண்டுள்ளது.

விவசாயிகளுக்கு நேரடியாக மானியம் விடுவித்தல்:

எந்தெந்த விவசாயிகள் அங்கீகரிக்கப்பட்ட நுண்ணீர் பாசன நிறுவனங்கள் மூலம் தங்களது முழுச் செலவில் நுண்ணீர் பாசனம் அமைக்கிறார்களோ, அவர்களுக்கு மானியம் நேரடியாக விடுவிக்கலாம். அதில் நடைமுறைச் சிக்கல் ஏதும் இருப்பின் முதலில் இதர விவசாயிகளுக்கு செயல்படுத்தலாம். மேலும், விவசாயிகள் அங்கீகரிக்கப்பட்ட நுண்ணீர் பாசன நிறுவனங்களை தங்கள் விருப்பத்தின் பேரில் தேர்ந்தெடுக்கலாம் என அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	22	69	ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மாநில திட்டமாவதால் எஞ்சிய இலக்கினை நடப்பாண்டில் செயல்படுத்த துறை நடவடிக்கை மேற்கொண்டு இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			2012–2013 ஆம் நிதி ஆண்டில், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தில் வறட்சியின் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1925.00 இலட்சம் நிதியில் ரூ.1186.68 இலட்சம் மட்டும் செலவிடப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படாத இலக்குக்குரிய நிதி ரூ.738.32 இலட்சம் நிதி ஆண்டின் இறுதியில் ஒப்படைப்பு செய்யப்பட்டு விட்டது. 2013–2014 ஆம் நிதி ஆண்டில், ரூ.492.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு ரூ.485.713 இலட்சம் சாதனை அடையப்பட்டு விட்டது. 99 விழுக்காடு எய்தப்பட்டுள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
9	24	73	தோட்டக்கலை பயிர்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய விவசாயிகள் பயிற்சி பயனாளிகளுக்கு மிகவும் உபயோகம் உள்ளதாக அமைந்ததா? இது குறித்து குழுவிற்கு ஒரு அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி குறித்த உயர் தொழில்நுட்ப பயிற்சிகள் விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களின் மூலம் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. உயர் தொழில்நுட்ப சாகுபடி உத்திகளை கையாண்டு விவசாயிகள் தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரித்துள்ளனர்.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
			(4)
10	28	83	வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டம் முதல் கட்டமாக 11 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், கூடுதல் எண்ணிக்கையில் தானியங்கி வானிலை ஆய்வு கருவிகளை (Automatic Weather Station) அமைத்து இத்திட்டத்தை மிகுந்த பயனுள்ளதாக்க துறை நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மத்திய அரசின் வழிகாட்டுதலின் படியே பயிர் காப்பீட்டுத் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, 2013–ஆம் ஆண்டு ரபி பருவம் முதல் வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்துவது நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, கூடுதல் எண்ணிக்கையிலான வானிலை ஆய்வு கருவிகளை அமைத்து வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவது சாத்தியமற்றதாகிவிட்டது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
			(4)
11	29	85	தோட்டப் பயிர்களுக்கு சாகுபடிச் செலவு அதிகமாகி விடுவதால் காப்பீட்டுத் தொகையும் உயர்கிறது. இதன் விளைவாக பிரிமியத் தொகையும் உயர்கிறது. எனவே, திட்டச் சாதனையை பாதிக்காமல் இருக்க கூடுதல் பிரிமியத் தொகையை அரசு மூலம் செலுத்த வழிவகை காண துறை நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மத்திய அரசின் விதிமுறைகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் பிரிமியம் தொகைக்கான மானியம் நிர்ணயிக்கப்படுகிறது. 2015–ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டு வந்த தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பிரிமியம் தொகைக்கான மானிய பகிர்வு பின்வருமாறு:–	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

விவசாயிகள் பிரிவு	துணை பிரிவு	பிரிமியத்தில் விவசாயிகளின் பங்கு %	மத்திய அரசின் மானியம் %	மாநில அரசின் மானியம் %	மொத்தம் %
கடன் பெறும் விவசாயிகள்	சிறு / குறு	50	5	45	100
	இதர	50	–	50	100
கடன் பெறாத விவசாயிகள்	சிறு / குறு	45	5	50	100
	இதர	50	–	50	100

இதன்படி, பிரீமியத்தில் விவசாயிகளின் பங்கு 50% ஆக இருந்து வந்தது. ஆனால், தற்போது 2016 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள், பிரீமியத் தொகையில் 5% மட்டுமே செலுத்துகின்றனர். மீதமுள்ள 95% மத்திய, மாநில அரசுகளால் சரிசமமாக பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	30	87	2012–2013–ஆம் நிதி ஆண்டில் 226 சாலை பராமரிப்புப் பணிகள் ரூ.324.17 இலட்சத்திற்கு இலக்கீடு 31.03.2013 முடிய 226 சாலை பராமரிப்புப் பணிகள் ரூ.310.68 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
பரிந்துரையில் கேட்டுள்ளவாறு 2012–2013–ஆம் நிதி ஆண்டில் கரும்பு மேல்வரி நிதியிலிருந்து ரூ.310.68 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்ட 226 கரும்பு சாலை பராமரிப்பு பணிகளின் விவரங்களை தலைமைப் பொறியாளர் (கட்டிடம் (ம) பராமரிப்பு), சேப்பாக்கம் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	33	95	தென்னை மரத்தினைச் சுற்றியுள்ள களைகளை அகற்றுவதற்கு உரிய கருவிகளை 2013–2014–இல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் கண்டுபிடிக்க துறை நடவடிக்கை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தென்னை மரத்தைச் சுற்றியுள்ள களைகளை வெட்டி அப்புறப்படுத்த டிராக்டரால் இயங்கும் சுழலும் மண்வெட்டி மற்றும் புதர் நீக்கு இயந்திரம் ஆகியன தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1. டிராக்டர் இயங்கும் சுழலும் மண்வெட்டி நாள் ஒன்றுக்கு 1.5 எக்டரில் களைகளை வெட்டி எடுக்கும் திறன் உடையது. இந்த இயந்திரத்தின் விலை ரூ.1,00,000/– ஆகும். 26.2 முதல் 38.50 விழுக்காடு விலையில் சேமிப்பு உடையது. இவ்வியந்திரம் பணியில் 96 விழுக்காடு நேரத்தை சேமிக்கிறது. 2. புதர் நீக்கும் இயந்திரம் டீசலால் இயங்கக் கூடிய நீரால் குளிரூட்டப்படும் 13 குதிரை திறன் கொண்ட டில்லர், மணிக்கு இரண்டு லிட்டர் எரிபொருள் தேவைப்படும். இதில் 16 வெட்டும் தட்டுகள் உடையது. இதில் எக்டர் ஒன்றுக்கு புதர் வெட்ட ஆகும் செலவு ரூ.1800/– ஆகும். ஒரு நாளில் 2 ஏக்கர் பரப்பில் உபயோகப்படுத்தலாம். இதன் விலை ரூ7000/– ஆகும். இதன் சிறப்பியல்புகளாவன:– • குறைந்த விசைத்திறன் போதுமானது. • புற்கள் மற்றும் களைகளை மண் அமைப்பு மாறாமல் வெட்ட வல்லது. • அடி மரத்திலும் களை எடுக்க இயலும். • கரடுமுரடான இடங்களிலும் பயன்படுத்தலாம். • பார்த்தீனியத்தினை களையவல்லது. • புல்வெளி மற்றும் மைதானங்களை பராமரிக்க ஏற்றது. • பவர் டில்லருடன் புழுதி ஒட்ட பயன்படக்கூடியது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
14	34	97	ரூ.52.93 கோடி செலவில் 1177 கட்டுமானங்கள் தொடர்பான கருத்துருக்களை அரசிடம் பெற துறை தூரித நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்கான ஒப்புதலை அரசிடமிருந்து பெற்று இப்பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.	தமிழக அரசு செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெருந்திட்டத்தின்கீழ் ரூ.550 கோடியை மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.198/பொதுப் பணித் துறை/ நாள் 10.06.2008 வாயிலாக நிர்வாக ஒப்புதல் ஆணை வெளியிடப்பட்டது. அதில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ரூ.15284.00 லட்சம் செலவில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் அமைப்பதற்காக உத்தேசித்து அனுமதி வழங்கப்பட்டது. இதற்காக, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு 2008–2009 முதல் 2011–2012 ஆம் ஆண்டுவரை ஆண்டுக்கு ரூ.25.00 கோடி வீதம் மொத்தம் ரூ.100.00 கோடிக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 9830 பணிகள் முடிக்கப்பட்டது. மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு செயல்படுத்த தொடர்ச்சியாக அரசாணை (நிலை) எண்.60/பொதுப் பணித் துறை, நாள் 28.02.2011 (2011–2012 மற்றும் 2012–2013) மற்றும் அரசாணை (நிலை) எண்.153/பொதுப்பணித் துறை/நாள் 17.07.2013 (2013–2014 மற்றும் 2014–2015) மூலம் நீட்டிப்பு அளித்து ஆணையிடப்பட்டது. 2012–2013 ஆம் ஆண்டில், இத்திட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக 1177 செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் அமைப்பதற்காக, ரூ.52.93 கோடி ஒப்பளிப்பு செய்ய தலைமைப் பொறியாளர் (வே.பொ)–ஆல் கருத்துரு அனுப்பப்பட்டது. இக்கருத்துரு தொடர்பாக, 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கு முந்தையதாக நடைபெற்ற மாநிலத் திட்டக்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அக்கூட்டத்தில், இதுபோன்று செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் தாக்கம் குறித்து தொழில் முறையாக, தன்னிச்சையான முகமை மூலம், மதிப்பீடு செய்த பின் ஒப்பளிப்பு செய்யலாம் என மாநிலத் திட்டக்குழு தெரிவித்தது. அதனடிப்படையில் ரூ.52.93 கோடி செலவில் செயற்கைமுறை நிலத்தடிநீர் செறிவூட்டும் கட்டுமானப் பணிகள் திட்டம் தள்ளிப் போடப்பட்டதால், நிதி ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
15	36	104	கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தனியாக நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அமைக்கப்பட வேண்டும் என அம்மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் குழுவிடம் கோரிக்கை வரப்பெற்றுள்ள நிலையில் கருத்துருவினை அனுப்புமாறும் இதன் மீது தூரித நடவடிக்கை எடுத்து விரைவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அமைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து துறை ஓர் அறிக்கை அனுப்பிவைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அம்முகமை செலவு செய்வதற்கு இயலாத நிலையில் இருக்கும்பட்சத்தில், புதிதாக உருவாக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு தனியாக நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை தொடங்குவதற்கான கருத்துரு தள்ளி வைக்கப்படுகிறது (Deferred).	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

இணைப்பு – 3

மேலும் தொடர விரும்பும் பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
1	1	7	கிடங்கு மேலாளர் தரம் 1,2 ஆகிய பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்பிடவும் கிடங்கு மேலாளர் தரம் 3 பணியிடத்தினையும் மற்றும் வேளாண்மைத் துறையில் காலியாக உள்ள 454 வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் மற்றும் 400–க்கும் மேற்பட்ட உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பிட வேண்டும் என்றும் இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை ஒன்று குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
காலியாகவுள்ள கிடங்கு மேலாளர் தரம் 1,2 பணியிடங்களை நிரப்ப, பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கப்பட்டு, தகுதியுள்ள நபர்களுக்கு, கிடங்கு மேலாளர் தரம் 1 இல் 32 நபர்களுக்கும் கிடங்கு மேலாளர் தரம் 2 இல் 149 நபர்களுக்கும், பதவி உயர்வு வழங்கப்பட்டு பணியிடங்கள் நிரப்பப்பட்டு விட்டன. வேளாண்மைத் துறையில் தற்பொழுது 132 வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் மற்றும் 580 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் காலியாகவுள்ளன. மேலும், எதிர்கால காலிப்பணியிடங்களையும் கருத்தில் கொண்டு மொத்தம் 195 வேளாண்மை அலுவலர் பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் அறிவிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 580 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் நிரப்ப தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தேர்வு முடிவுகள் வெளியாகி உள்ளன. சான்றிதழ் சரிபார்க்கும் பணிகள் நிறைவடைந்து விட்டன. விரைவில் இறுதி பட்டியல், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து எதிர்நோக்கப்படுகிறது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	கிடங்கு மேலாளர் தரம் 3 பணியிடங்களை நிரப்ப எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தைப் பெற குழு விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	7	34	ரூ. 18.30 கோடி செலவில் புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் (தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் – 25 எண்கள் – ரூ. 11.93 கோடி, விதை கிராமத்திட்டம் – 10 எண்கள் –ரு.6.37கோடி) அமைக்கும் பணிகள் முழுவதும் நிறைவு பெற்றதா என்ற விபரம் குறித்து குழுவிற்கு அறிக்கை ஒன்று அளிக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (டான்சிடா)

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
ரூ.18.18 கோடி செலவில் புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் (தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் 25 எண்கள் – ரூ.11.81 கோடி, விதை கிராமத் திட்டம் 1 எண் ரூ.6.37 கோடி) அமைக்கும் பணிகள் முழுவதும் நிறைவு பெற்று அனைத்து விதை சுத்திகரிப்பு நிலையங்களும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I/2013–83, நாள் 10.10.2019)	தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டில் 12 இலட்சம் குறைத்து செலவிடப்பட்டதற்கான காரணத்தை குழு அறிய விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	9	38	மாநிலத்தில் மண் மாதிரிகளை ஆய்வு செய்து 82 இலட்சம் பண்ணைக் குடும்பங்களுக்கும் 'விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு' வழங்கியுள்ளதை குழு அறிகிறது. இத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தி விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள் வழங்கிட குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
3 வருடங்களில் 82 இலட்சம் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள் வழங்க திட்டமிடப்பட்டது. வேளாண் பயிர்கள் 67.45 இலட்சம் நில உடைமைகளில் மட்டுமே சாகுபடி செய்யப்படுவதால், 67.45 இலட்சம் ''விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடுகள்'' விநியோகம் செய்யப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I/2013–83, நாள் 10.10.2019)	வேளாண் பயிர்கள் 67.45 இலட்சம் நில உடைமைகளில் மட்டுமே சாகுபடி செய்யப்படுகையில், எவ்வாறு 82 இலட்சம் என மதிப்பிடப்பட்டது என்பது குறித்து குழு அறிய விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	11	42	மண்புழு உரக்கூடங்கள் அமைத்தால் நல்ல உற்பத்தி கிடைக்கும் என்று குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. மண்புழு உரம் தயாரிக்க அனைத்து விவசாயிகளுக்கும் மண்புழு உரக்கூடம் அமைக்கவும், கட்டிங் இயந்திரம் உட்பட மானியத்தில் வழங்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
அங்கக இடுபொருட்கள் உற்பத்தியின் கீழ் ரூ. 25,000/– நிரந்தர மண்புழு உர கட்டமைப்பிற்கு 50 சதவீத மானியம், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் – மானாவாரி பகுதி மேம்பாடு திட்டத்தின் NMSA-RAD கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2018–2019 இல், 590 மண்புழு உர கட்டமைப்புகள் ரூ.1.33 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 2018–2019 இல், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் (NADP) ஒருங்கிணைந்த பண்ணையத்தில் 1,724 நிரந்தர மண்புழு உர கட்டமைப்புகள் ரூ.12,500 மானியத்தில் ரூ.2.13 கோடி நிதி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. 2019–2020–ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தின் கீழ் 3,300 மண்புழு உரத்தொட்டிகள் நீடித்த நிலையான வேளாண்மைக்கான இயக்கம்–மானாவாரி பகுதி மேம்பாட்டின் மூலம் ரூ.8.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு கோரப்பட்டுள்ளது. மேலும், ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம்–தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 1,000 மண்புழு உரத்தொட்டிகள் ரூ.2.50 கோடிக்கு அமைக்கப்படும். (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	உரக்கூடம் அமைக்க விருப்பம் தெரிவிக்கிற அனைத்து விவசாயிகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறதா என்பது குறித்த விவரத்தைப் பெற குழு விரும்புகிறது. மேலும் கட்டிங் இயந்திரம் குறித்த விவரத்தையும் பெற குழு விழைகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	15	50	இனிவரும் காலங்களில் வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மூலம் தென்னை வாடல் நோய் குறித்து தனியாக தீவிர வழி வகைகளை ஆய்வு செய்து நோய் வருவதற்குரிய காரணத்தைக் கண்டுபிடித்து, நோயினைக் கட்டுப்படுத்த துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

குழுவின் குறிப்புரை
(6)

தென்னை வாடல் நோயினை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சி முடிவுகள் குறித்து குழு அறிய விழைகிறது.

தென்னை வாடல் நோய்க் குறித்த ஆராய்ச்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து நடந்து வருகின்றது.

தென்னையில் இருவகையான வாடல் நோய்கள் காணப்படுகிறது.

1. தஞ்சாவூர் வாடல் நோய் என்று அழைக்கப்படும் அடித்தண்டழுகல் நோய்.
2. வேர்வாடல் நோய் என்று அழைக்கப்படும் பைட்டோபிளாஸ்மா நோய்.

1. தஞ்சாவூர் வாடல் நோய்

இந்நோய் கேனோடெர்மாலூசிடம் எனப்படும் பூஞ்சாணத்தால் ஏற்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்நோயின் காரணி, அறிகுறிகள், தாக்கும் விதம் மற்றும் அதற்குரிய மேலாண்மை முறைகளை பல ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறிந்து விவசாயிகளுக்கு நேரிடையாகவும், ஊடகங்களின் வாயிலாகவும் வழங்கி வருகிறது. நோய்த்தாக்கப்பட்ட மரங்களின் அடித்தண்டில் செந்நிற திரவம் வடிந்து காணப்படும். அடிமட்டைகள் பழுப்பு நிறமாக மாறி தொங்கியபடி இருக்கும். நோய் தீவிரமடையும் போது குரும்பை உதிர்ந்து, மரத்தின் அடித்தண்டில் வெண்மை நிறக்காளான் காணப்படும்.

1. ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள்

- தென்னையில் அடித்தண்டழுகல் நோயின் தாக்கத்தை குறைக்க வட்டப்பாத்தி நீர் பாசன முறையை கடைப்பிடிக்க வேண்டும். ஒரு மரத்திற்கு பாய்ந்த நீர் மற்ற மரங்களுக்கு பாயாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- மரத்தைச் சுற்றி 1.8 மீ ஆரம் கொண்ட வட்ட பாத்தி அமைத்து தென்னைக்கு பரிந்துரைக்கப்படும் உர அளவுகள் முறையே 50 கிலோ தொழு உரம், 1.3 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட், 3 கிலோ பொட்டாஷ் மற்றும் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை வருடத்திற்கு இரு முறை பிரித்து சம அளவில் இட்டு மண் அணைத்து நீர் பாய்ச்ச வேண்டும்.
- நோயின் அறிகுறி தென்பட்டவுடன் 1 சதவீதம் போர்டோ கலவையை வேர் நன்கு நனையும்படி மரத்திற்கு 40 லிட்டர் என்ற அளவில் ஊற்ற வேண்டும். தாக்கப்பட்ட மரத்திற்கு அருகிலுள்ள மரங்களுக்கு நோய் பரவுவதை தடுத்திட

1 சதவீதம் போர்டோ கலவையை கொண்டு மண் நன்கு நனையும்படி ஊற்ற வேண்டும் (அல்லது) பாதிக்கப்பட்ட மற்றும் அவற்றிற்கு அருகிலுள்ள தென்னை மரங்களுக்கு 2 கிராம் ஆரியோப்பங்கின்சாலுடன் 1 கிராம் காப்பர் சல்பேட்டை 100 மி.லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் வருடத்திற்கு மூன்று முறை உட்செலுத்த வேண்டும்.

- சூடோமோனாஸ் புளூரசன்ஸ் மற்றும் டிரைகோடெர்மா விரிடி ஆகிய எதிர் உயிர் கொல்லிகளை தலா 200 கிராம் என்ற அளவில் எடுத்து அதை 10 கிலோ மக்கிய சாண எருவுடன் கலந்து 6 மாதங்களுக்கு ஒரு முறை இட வேண்டும். பாஸ்போபாக்டீரியா, அசோடோபாக்டர் ஆகியவற்றை தலா 200 கிராம் என்ற அளவில் எடுத்து அதை 10 கிலோ மக்கிய சாண எருவுடன் கலந்து ஒவ்வொரு ஆண்டும் இட வேண்டும்.

மரத்தைச் சுற்றி வட்டப்பாத்தியில் 50 கிராம் சாணப்பை விதையை விதைத்து பூக்கும் தருணத்தில் மண் வெட்டியால் வெட்டி மடக்கவும்.

வேர்வாடல் நோய்

இந்நோய் பைட்டோபிளாஸ்மா என்ற நோய்க்கிருமியால் ஏற்படுகிறது. கேரளா மற்றும் தமிழ்நாட்டில் கேரளா மாநிலத்தை ஒட்டிய பகுதிகளான திருநெல்வேலி, தேனி, கன்னியாகுமரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இந்நோய் தாக்கி இருப்பது பற்றி கண்டறியப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மரம் பல ஆண்டுகள் உயிர் பிழைத்து நின்று குறைந்த அளவே மகசூல் தரும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கடந்த 4 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக தென்னையைத் தாக்கும் பைட்டோபிளாஸ்மா நோய்க்காரணியை கண்டறியும் மரபணு சோதனை முறையும், இந்நோய் தத்துப்பூச்சியால் பரவுவதும் கண்டறியப்பட்டுள்ளது. இந்நோயை கட்டுப்படுத்துவதற்கு தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

உண்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
6	25	75	2012–2013–இல் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு செயல்படுத்துவதற்குரிய அரசாணை வழங்கப்பட்டு விட்டதா, வழங்கப்படவில்லை எனில் துறை தாமத நடவடிக்கை மேற்கொண்டு அரசாணை வெளியிட்டு பணியை விரைவாக முடிப்பதற்கு குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து அரசாணையுடன் அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.	2012–2013–ஆம் ஆண்டு பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு ரூ.50.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. அரசாணை(ப) எண்.21, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 28.01.2013 இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத் துறை கோரிய கோரிக்கையினை ஏற்கப்படவில்லை என்பதால், வேளாண்மைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை என்ற விவரத்தை மதிப்பீட்டுக் குழுவிற்குத் தெரிவித்துக் கொள்ளலாம். (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. 2012–2013 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வேளாண்மைத் துறைக்கு நிதியொதுக்கம் எவ்வளவு கோரப்பட்டது என்பது குறித்த விவரத்தை குழு அறிய விழைகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
7	26	77	உயர் தொழில்நுட்ப உயர் விளைச்சல் திட்டம், துல்லிய பண்ணையம் ஆகியன சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதை குழு அறிகிறது. இருப்பினும் 100 சதவீத வளர்ச்சியை அடைவதற்கு துறை தீவிர நடவடிக்கையினை மேற்கொண்டு இலக்கினை அடைவதற்கு குழு பரிந்துரை செய்கிறது.	2012 – 2013 ஆம் ஆண்டில், ரூ.12.6 கோடி நிதியில் 5940 எக்டர் பரப்பில் துல்லிய பண்ணையமும், ரூ.10.3 கோடி நிதியில் 7306 எக்டர் பரப்பில் உயர் தொழில்நுட்ப உயர் விளைச்சல் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	உயர் தொழில்நுட்ப உயர் விளைச்சல் மற்றும் துல்லிய பண்ணையம் ஆகியன செயல்படுத்தப்பட்டதன் காரணமாக 100 சதவிகித வளர்ச்சி அடையப்பட்டதா என குழு அறிய விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	27	79	துறை நிர்ணயித்த இலக்கு அளவில் காப்பீடு செய்ய இயலாததற்குரிய காரணத்தை குழுவிற்கு தெரிவிக்கவும் இலக்கினை இனிவரும் காலங்களில் அடைவதற்கு துறை தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், இது குறித்து துறை எடுத்த நடவடிக்கையினையும் குழுவிற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்

(5)

தோட்டக்கலை பயிர்களுக்கான பிரிமியம் தொகை, வேளாண் பயிர்களை காட்டிலும் கூடுதலாக இருப்பதால் இலக்கு முழுமையாக சாதனை அடைவதில் சிரமம் காணப்படுகிறது. மேலும், காப்பீட்டிற்கு உள்ளாகும் முக்கிய பயிர்கள் அனைத்தும் நீர்ப்பாசனத்தின் மூலம் சாகுபடி செய்வதாலும், உயர் தொழில் நுட்பங்கள் மூலம் சாகுபடியை மேம்படுத்துவதாலும் குறைந்த பயிர் சேத இடர்களினால் விவசாயிகள் திட்டத்தில் பயன்பெற முன்வருவதில்லை. மேலும் பயிர் காப்பீட்டில் வாழைப் பயிர்களுக்கு காற்றினால் ஏற்படும் சேதத்தினை கணக்கில் எடுப்பதில்லை. இதற்கு முன்பு உள்ள வருடங்களில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு இல்லாத காரணத்தினால் நிவாரணத் தொகை கிடைக்கவில்லை. வாழை, மாவள்ளி, வெங்காயம், மஞ்சள், மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற ஆறு வகை பயிர்களுக்கு மட்டுமே காப்பீடு செய்ய வழிவகை உள்ளது. பெரும்பாலான தோட்டக்கலை பயிர்கள் பல்லாண்டு காலப்பயிர்களாக இருப்பதாலும், காய்கறிகள் பலமுறை அறுவடை (Multi Picking Crop) செய்யும் பயிர்களாக இருப்பதாலும் இத்திட்டத்தின் கீழ் அறிவிப்பு செய்யப்படவில்லை. மேற்கூறிய காரணங்களினால் தோட்டக்கலைத் துறையினால் நிர்ணயித்த அளவில் காப்பீடு செய்ய இயலவில்லை.

இனிவரும் காலங்களில் இலக்கினை அடைவதற்கு தோட்டக்கலைத் துறை பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது

1. விவசாயிகள் பங்கு பெறும் கூட்ட நிகழ்வுகளில் பயிர் காப்பீடு பற்றிய விழிப்புணர்வு மற்றும் அவை சம்மந்தப்பட்ட துண்டு பிரசுரம் போன்றவை வழங்கப்படுகின்றன.
2. மாவட்டத் துணை இயக்குநர்களுக்கு மாதந்தோறும் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் அதிகமான விவசாயிகளை பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இணைவதற்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.
3. வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர், வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலை இயக்குநர் ஆகியோர் நேர்முக கடிதம் மூலம் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கும், தோட்டக்கலைத் துணை இயக்குநர்களுக்கும், பயிர் காப்பீடு இலக்கினை அடைய அறிவுறுத்தி வருகிறார்கள்.

குழுவின் குறிப்புரை

(6)

துறை நிர்ணயித்த காப்பீடு அளவு, இலக்கு எவ்வளவு என்பது குறித்த விவரத்தையும் அளிக்காதது குறித்து குழு தனது வருத்தத்தை பதிவு செய்கிறது. இலக்கினை எட்ட எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த விவரத்தை குழு அறிய விழைகிறது.

4. செய்தித் தாள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சி மூலம் மாவட்டங்களில் பயிர் காப்பீடு பற்றி விளம்பரப்படுத்தப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
9	31	90	கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 414.91 கி.மீ நீளத்திற்கு ரூ.200.29 கோடி செலவின மதிப்பீட்டில் மேற்படி கரும்பு மேல்வரி பயன்பாட்டுக் குழுவின் தேர்விற்காக 29.04.2013–இல் மேற்படி குழுவின் கூட்டம் முடிவுற்றதா? எனவும் அது எடுத்த முடிவு குறித்தும் அறிக்கையினை குழுவிற்கு அனுப்பிவைப்பதற்கும், குழு அனுமதியுடன் மேற்படி சாலைப் பணிகளை விரைவாக முடிப்பதற்கு துறை தூரித நடவடிக்கை எடுக்கவும் குழு பரிந்துரை செய்கிறது.	29.04.2013 அன்று நடைபெறவிருந்த கூட்டம் தள்ளி வைக்கப்பட்டு 18.11.2013 அன்று நடந்தது. அதைத் தொடர்ந்து 30.01.2014 அன்று கூட்டம் நடந்தது. கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கரும்பு சாலைகள் அமைப்பதற்கான முன்மொழிவு 30.01.2014 அன்று நடத்தப்பட்ட கரும்பு மேல்வரி பயன்பாட்டுக் குழுவின் கூட்டத்தில் வைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரைக்கேற்ப 2013–2014–இல் கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 15 புதிய கரும்பு சாலைகள் (ஒரு உயர்மட்ட பாலம் உட்பட) கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் ரூ.1965.70 இலட்சம் (ரூபாய் பத்தொன்பது கோடியே, அறுபத்தைந்து இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் அமைக்க, அரசாணை (நிலை) எண்.37, வேளாண்மை (க2) துறை, நாள் 17.12.2014–இல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கரும்பு சாலைப்பணிகளை செயல்படுத்த நெடுஞ்சாலை துறை (திட்டம்), முதன்மை பொறியாளர் அவர்கள் சர்க்கரைத் துறை இயக்குநரால் 18.02.2014–அன்று கேட்டுக் கொள்ளப்பட்டார். எனினும் முதன்மைப் பொறியாளர் (திட்டம்) தனது 20.10.2014 நாளிட்ட கடிதத்தில் மேற்படி 15 சாலைப் பணிகள் 5 பணிகளை பல்வேறு காரணங்களால் செயல்படுத்த இயலாத நிலையினை தெரிவித்து, அவற்றை நீக்கம் செய்ய அரசாணை பெற்றுத் தரக்கோரி பிரேரணை அனுப்பினார்கள். அப்பிரேரணை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாணை எண்.80, வேளாண்மைத் துறை, நாள் 25.03.2015–இல் ரூ.526.00 இலட்சம் மதிப்பீட்டிலான 5 பணிகளை நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டது. மீதமுள்ள 10 பணிகளில் 3 பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. ஏனைய 7 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக நெடுஞ்சாலைத் துறையின் முதன்மைப் பொறியாளர் (திட்டங்கள்) தெரிவித்துள்ளார். (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	கரும்பு மேல்வரி பயன்பாட்டுக் குழுவின் பரிந்துரைக்கேற்ப 14.39 கோடி செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட 10 பணிகளில் முடிக்கப்பட்ட 3 பணிகளின் மதிப்பீடு, மீதமுள்ள 7 பணிகள் முடிக்கப் பெறாமல் உள்ளதற்கான காரணங்களை குழு அறிய விரும்புகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	32	93	இது குறித்து தஞ்சாவூர் மாவட்ட தமிழ்நாடு மகளிர் வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத்தின் மூலம் மகளிர் குழுக்களுக்கு உளுத்தம் பயிற்றினை உடைத்திடும் கருவிகளை வழங்கிட குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

அரசாணை (நிலை) எண்.250, நாள் 17.12.2013 மற்றும் அரசு கடித (நிலை) எண்.65, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 04.06.2014 ஆகியவற்றின் படி மத்திய அரசின் "அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை" திட்டத்தினை 2014–2015ஆம் ஆண்டில் செயல்படுத்திட ஆணைகள் பெறப்பட்டு, 22 எண்கள் பல்வகை பயிர் கதிரடிக்கும் இயந்திரம், 27 எண்கள் மக்காச்சோளம் பிரித்தெடுக்கும் கருவி மற்றும் 32 எண்கள் சிறிய பருப்பு உடைக்கும் இயந்திரம் ஆகியவற்றினை கொள்முதல் செய்திடவும், அவற்றினைக் கொண்டு 29 மாவட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையின் வாயிலாக மொத்தமாக 327 எண்கள் செயல்விளக்கங்கள் செய்து காண்பித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 2014–2015 ஆம் ஆண்டில் 22 எண்கள் பல்வகை பயிர் கதிரடிக்கும் இயந்திரம் மற்றும் 16 எண்கள் மக்காச்சோளம் பிரித்தெடுக்கும் கருவி ஆகியன வேளாண்மைப் பொறியியல் துறையால் கொள்முதல் செய்யப்பட்டு அவற்றினைக் கொண்டு 71 எண்கள் செயல் விளக்கங்கள் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது. அரசு கடித (நிலை) எண்.117, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 03.06.2015–இன்படி 2015–2016 ஆம் நிதியாண்டில் மீதமுள்ள 11 எண்கள் மக்காச்சோளம் பிரித்தெடுக்கும் இயந்திரம், 32 எண்கள் சிறிய பருப்பு உடைக்கும் இயந்திரம் ஆகியவற்றினை கொள்முதல் செய்திடவும், மீதமுள்ள 256 எண்கள் செயல் விளக்கங்கள் செய்து காண்பித்திட ரூ.81.4428 லட்சம் நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்ட பிறகு குறைந்த பட்சம் 12 மாதங்கள் கடந்த பின்னர் இந்த இயந்திரங்களை சிய உதவிக்குழு/ டான்வேப் குழு / பயனாளிகள் குழு / விவசாயிகள் குழு / நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் / விளைபொருள் குழு ஆகியவற்றிற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட சிறிய பருப்பு உடைக்கும் இயந்திரம் உளுத்தம் பயிற்றினை உடைத்திடவும் ஏற்றது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

குழுவின் குறிப்புரை
(6)

தமிழ்நாடு மகளிர் வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத் திட்டத்தின்கீழ் மகளிர் குழுக்கள் பயன்பெறும் வகையில் சிறிய பருப்பு உடைத்திடும் இயந்திரம் வழங்கப்பட்டதா என்பதை குழு அறிய விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
11	37	109	புதுக்கோட்டை வம்பனில் உள்ள தேசிய பயறுவகை ஆராய்ச்சி மைய வளாகத்தில் சுமார் 75 இலட்சம் மதிப்பீட்டில் 5000 சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளோடு கூடிய ஒரு உழவர் விடுதி கட்டுவதற்கு ஒரு கருத்துரு தயார் செய்து அரசுக்கு அனுப்பிவைக்குமாறு அங்கு உழவர் விடுதி கட்டுவதற்கு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
வம்பனிலுள்ள தேசிய பயறுவகை ஆராய்ச்சி மைய வளாகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய 5000 சதுர அடி பரப்பில் உழவர் விடுதி கட்டுவதற்காக ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளது. இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	2013–ஆம் ஆண்டு மதிப்பீட்டுக் குழு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. அரசுக்கு கருத்துரு வரப்பெற்ற நாள், காலதாமதத்திற்கான காரணம் குறித்த விவரங்களை அறிய குழு விரும்புகிறது. மேலும் விரைந்து ஒப்புதல் வழங்கி பணிகளை முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
12	38	113	திருவாரூர் மாவட்டத்தில் விதை பரிசோதனை நிலையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் வேளாண்மைத் துறைக்கான ஒருங்கிணைந்த கட்டிட வளாகத்தில் அமைக்கப்பட வேண்டும் என அம்மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் குழுவிடம் கோரிக்கை வரப்பெற்றுள்ள நிலையில் கருத்துருவினை அனுப்புமாறும், இதன் மீது துரித நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் விதை பரிசோதனை நிலையத்தை அமைத்திடவும், இது குறித்து துறை ஓர் அறிக்கை அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	திருவாரூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டிட வளாகத்தின் தரைதளம் முழுவதிலும் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் இயங்கி வருகிறது. இக்கட்டிடத்தின் மேல் தளத்தில் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேல்தளம் கட்டும் பட்சத்தில் விதை பரிசோதனை நிலையம் செயல்பட இடம் ஒதுக்கீடு செய்து தரப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	திருவாரூர் மாவட்ட துறை அதிகாரிகளிடமிருந்து எப்போது கருத்துரு பெறப்பட்டது, அது பரிசீலிக்கப்பட்டதா என்பது குறித்தும் குழு அறிய விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
13	42	125	நாகப்பட்டினம் நகராட்சிக்குச் சொந்தமான தாமரைக் குளத்தினை தூர்வாரி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்றும், இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	தாமரைக்குளம் நகரின் நடுவே புதிய பேருந்து நிலையம், மாவட்ட காவல் துறை அலுவலகம் மற்றும் மாவட்ட நீதிமன்றம் அருகாமையில் 9.00 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மேற்படி குளத்தின் முக்கியத்தன்மை மற்றும் பயன்பாடு கருதி குளத்தின் நான்கு கரைகளையும் சீரமைத்து சிமெண்ட் கான்கிரிட் பிளாக்குகள் பொருத்தி நடைபாதை மற்றும் பூங்காவினை மேம்பாடு செய்திட ஏதுவாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.15040/2017/இ1, நாள் 25.04.2018–இல் மூலதன மான்யம் (CGF) 2017–2018–ஆம் ஆண்டிற்கு ரூ.54.88 இலட்சம் மற்றும் 2018–2019– ஆம் ஆண்டிற்கு ரூ.70.12 இலட்சம் ஆக கூடுதல் ரூ.125.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு 19.02.2019–இல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 28.02.2019–இல் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பணி துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது. மேலும், 15.09.2019–ற்குள் பணியினை முழு நிலையில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது என நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)	அனைத்து பணிகளும் முடிக்கப்பெற்ற பின்னர் குழுவிற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பிவைக்கப் பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
14	43	132	தமிழ்நாட்டிற்கு அதிக வருவாய் ஈட்டக்கூடிய இடமான முத்துப்பேட்டை அலையாத்தி காடுகள் உள்ளதால் மேற்படி இடத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்கவும், அந்த இடத்தை மேம்படுத்தும் வகையிலும் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

2013–2014 ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுதவியின் கீழ் திருவாரூர் மாவட்டத்திலுள்ள முத்துப்பேட்டை கழிமுகப்பகுதியில் ரூ.217.80 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை (நிலை) எண்.141, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (சு3) துறை, நாள் 06.06.2013–இல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை வெளியிடப்பட்டு 18 மாதங்கள் ஆகியும் திட்டப்பணிகள் தொடங்கப்படாததால் திருவாரூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து ஒப்பளிக்கப்பட்ட மொத்த தொகை ரூ.217.80 இலட்சத்தில் ரூ.192.80 இலட்சம் சுற்றுலா ஆணையரால் திரும்பப் பெறப்பட்டு அதற்கான பணிகள் கைவிடப்பட்டுள்ளன. மீதம் உள்ள ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 2014–2015–ஆம் நிதியாண்டில் மாநில அரசு பகுதி–2 திட்டத்தின்கீழ் திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை உவர் ஏரியில் சுற்றுப்புற உயிரின சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள திருவாரூர் வன அலுவலருக்கு ரூ.61 இலட்சமும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு ரூ.56.70 இலட்சமும் (மொத்தம் ரூ.117.70 இலட்சம்) நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(வேளாண்மைத் துறையின் அ.சா.கு எண் 13298/பொது–I / 2013–83, நாள் 10.10.2019)

குழுவின் குறிப்புரை
(6)

முத்துப்பேட்டை கழிமுகப் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ஒப்பளிப்பு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்படாதற்கான காரணத்தை குழு அறிய விரும்புகிறது.

கி. சீனிவாசன்,
செயலாளர்.